**ARTICLE 60 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00055**
Vol. 20, No. 01 (October 2026) – Part III | pp. 35–38
Received: 1 October 2026 • Accepted: 3 October 2026

# மேலாண்மை பொன்னுச்சாமியின் “விரல் - சிறுகதைத் தொகுப்பு” - ஓர் பார்வை

**அனுசுயா சா**[1,*]
[1]அரசு உயர்நிலைப் பள்ளி அய்யனாரூத்து., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** அனுசுயா சா — anusuyaamoga@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்
மேலாண்மை பொன்னுச்சாமி கரிசல் மண்ணின் வாழ்வியலை பதிவு செய்த முக்கியமான எழுத்தாளர் ஆவார். அவரது ‘விரல்’ சிறுகதைத் தொகுப்பை மையமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது. கரிசல் விவசாயிகள், கூலித்தொழிலாளர்கள், குறிப்பாக பெண்களின் வாழ்வில் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்களை இத்தொகுப்பில் உள்ள 13 கதைகள் வழியே ஆராய்வதே இந்த கட்டுரையின் நோக்கமாகும். பம்புசெட் பாசனம், இரசாயன உரம் போன்ற நவீன விவசாய முறைகளால் பாரம்பரிய விவசாயம் எவ்வாறு மாறியது, நிலவுடைமையால் கூலி உறவு சிதைந்தது, ‘ஊர்சோறு’ போன்ற பரம்பரைத் தொழில் முறைகள் மறைந்தது ஆகியவற்றை ‘வேறு வேறு’, ‘ஊர்ச்சோறு’, ‘புன்செய்’, போன்ற கதைகள் யதார்த்தமாக எடுத்துரைக்கின்றன.

**Keywords / திறவுச் சொற்கள்:** பெண்களின் வாழ்வியல்; சமூக பொருளாதார மாற்றங்கள்; விவசாயம்; புன்செய்

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** சா, அ. (2026). மேலாண்மை பொன்னுச்சாமியின் “விரல் - சிறுகதைத் தொகுப்பு” - ஓர் பார்வை. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

## முன்னுரை

செ. பொன்னுச்சாமி என்னும் மேலாண்மை பொன்னுச்சாமி 1957-இல் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ‘மேலாண்மறைநாடு’ எனும் கிராமத்தில் சு. செல்லச்சாமி அன்னபாக்கியம் இணையருக்கு பிறந்தார். இளம் வயதிலேயே பெற்றோரை இழந்தார். ஐந்தாம் வகுப்போடு கல்வி முற்றுப்பெற்றது. இவர் விவசாயக் கூலியாக, பெட்டிக்கடை பணியாளராக, புளி வியாபாரி என பல்வேறு தொழில்களை செய்துள்ளார். படிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்டவராக இருந்தார். கல்வி தடைபட்டதால் நாளிதழ்கள், நூல்கள் வாசித்து தனது வாசிப்பார்வத்தை வளர்த்துக் கொண்டார். ஜெயகாந்தனின் நூல்கள் இவருள் தாக்கத்தை ஏற்படுத்தின. நாளிதழ்களுக்கு சிறுகதைகளை எழுதி அனுப்புகிறார். இவர் படைத்த படைப்புகள் பற்றியும் அப்படைப்புகளுள் ஒன்றான ‘விரல்’ என்ற சிறுகதைத் தொகுப்பினைப் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

## இலக்கிய வாழ்க்கை

படைப்பாளரான இவர் எழுதிய முதல் சிறுகதை ‘பரிசு’ 1972-இல் செம்மலர் இதழில் வெளியானது. இதன் ஆசிரியர் கே. முத்தையா இவரை தொடர்ந்து எழுத ஊக்குவித்தார். தீக்கதிர், குங்குமம், குமுதம், வாசுகி, கல்கி, தாமரை, இதயம் பேசுகிறது, தேவி, ராணி, ஓம் சக்தி, விழிப்பு, புதிய

பார்வை, தமிழன் எக்ஸ்பிரஸ் முதலிய முன்னணி இதழ்களிலும், இலக்கிய சிற்றேடுகளிலும் சிறுகதைத் தொடர்கள் எழுதினார். இவரின் முதல் சிறுகதைத் தொகுப்பு 'மானுடம் வெல்லும்' 1981-இல் வெளியானது. சிறுகதைத் தொகுப்புகளாக 'சிபிகள்', 'பூக்காத மாலை', 'மானுடப் பிரவாகம்', 'காகிதம்', 'கணக்கு', 'தழும்பு', 'தாய்மதி', 'விரல்', 'உயிர்காற்று', 'என் கனா', 'மனப் பூ', 'ஒரு மாலை பூத்து வரும்', 'அன்பூ வாசம்', 'பூச்சுமை', 'வெண்பூ மனம்', 'மானாவாரிப்பூ', 'மின்சார பூ', 'மனச்சுனை', 'ராசாத்தி' போன்ற படைப்புகளைப் படைத்துள்ளார். இவர் படைத்த நூல்களாக உயிர் நிலம், முற்றுகை, இனி, அச்சமே நரகம், ஆகாயச் சிறகுகள், ஊர் மண், முழு நிலா போன்றனவும், குறுநாவல்களாக ஈஸ்வர..., பாசத்தீ, தழும்பு, கோடுகள், மரம் போன்றன வெளிவந்துள்ளன. இவர் எழுதிய கட்டுரை 'சிறுகதைப் படைப்பின் உள் விகாரம்' என்பதாகும்.

## இலக்கிய இடம்

கரிசல் மண் மக்களின் வாழ்க்கையைத் தனது படைப்புகளில் முன் வைத்தவர். இவர் பொதுவுடமை சித்தாந்த நோக்கத்தில் இயல்பான பேச்சு நடையில் வட்டார வழக்கில் எழுதினார். பெண் சார்ந்த சிக்கல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். சொலவடைகள் மிக அதிக அளவில் இவரது படைப்புகளில் இடம்பெற்றன. மரபின் பெருமைகளையும் மரபின் சிதைவுகளையும் தனது படைப்புகளில் முன்னிலைப்படுத்தினார். முற்போக்கு இயக்கம் சார்ந்த எழுத்தாளரான இவர் அவ்வியக்கத்தின் முதன்மை படைப்பாளிகள் ஒருவராக மதிப்பிடப்படுகிறார். மேலும் 'மின்சாரப் பூ' எனும் சிறுகதை தொகுப்பிற்கு 2007-ம் ஆண்டில் சாகித்திய அகாடமி விருது கிடைத்தது. பிற படைப்புகளும் பல்வேறு பரிசுகளைப் பெற்றுள்ளன. கரிசல் எழுத்தாளர்களில் ஒருவரான இவர் உடல்நலக்குறைவால் 2017 அக்டோபர் 30 அன்று மறைந்தார். 2018-ல் இவரது நூல்கள் தமிழ்நாடு அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டது. சில படைப்புகள் பள்ளி, கல்லூரிகளில் பாடமாக வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## விரல் சிறுகதை தொகுப்பு

'விரல்' எனும் சிறுகதைத் தொகுப்பில் 13 சிறுகதைகள் உள்ளன. 1. விரல், 2. வேறு வேறு, 3. புஞ்சை, 4. இந்தியா, 5. கோடை மழை, 6. பலிபீடம், 7. ஈரம், 8. ஜீரணம், 9. கிடங்கு, 10. கட்டிப் புரளு, 11. +1 உலகம், 12. கறிவேப்பிலை, 13. ஊர்ச்சோறு எனும் சிறுகதைகள் ஆகும்.

திறமை என்பது விதை போன்றது. ஆனால் முறையான வாசிப்பும், உலகியல் அனுபவமும், ஓயாத பயிற்சியும் மட்டுமே அதை ஒரு படைப்பாளனாக முளைக்க வைக்கிறது. (ஜெயமோகன் – எழுத்து: ஓர் வழிகாட்டி)

கிராமங்களின் வாழ்வியல் சூழல் நவீன மயமாக்களினால் பல்வேறு மாற்றங்களைப் பெற்றுவிட்டன என்பதனையும், விவசாயிகளுக்கும் விவசாயக் கூலிகளுக்குமான உறவு நிலை, கரிசல் மண்ணின் வறட்சியில் முழு உழைப்பையும் போட்டாலும் வாழ்வின் அன்றாட முறைமைகளை கடத்துவதே பெரும் சவாலாக வாழும் கிராமத்துப் பெண்கள், சமூகத்தில் சாதி ரீதியாக வெளிப்படும் இன்னல்கள் என பலவித வாழ்வியலின்

எதார்த்த உண்மைகளை வெளிப்படுத்தும் விதமாக சிறுகதைகள் படைக்கப்பட்டுள்ளன.

## கிராமங்களின் புதிய பூச்சுகள்

“சொந்த மண்ணின் மக்களோடும் அவர்களின் வர்க்கப் போராட்டங்களோடும் தன்னை இணைத்துக் கொள்ளும் ஒருவனால் மட்டுமே மக்கள் எழுத்தாளனாக உருவாக முடியும்” (மேலாண்மை பொன்னுச்சாமி - சிறுகதை படைப்பின் உள் விகாரங்கள்).

கிராமங்களில் விவசாய உற்பத்தி முறைமைகளிலும், சாகுபடி விதமும் பல்வேறு மாற்றங்கள் பெற்றுவிட்டன. இப்போது உழவு, நவீன விதைகள், ரசாயன உரம், பூச்சி மருந்துகள் என உற்பத்திக்கு உழைப்பினை நம்பாமல் மாற்றம் நிகழ்ந்துவிட்டது.

‘வேறு வேறு’ எனும் சிறுகதையில் ‘பூவனம்’ எனும் விவசாயக்கூலி பெண் கணவனை இழந்தவள். தன் பிள்ளைகளின் சிறு சிறு தேவைகளை நிறைவேற்ற கடையில் சிறிது கடன் பட்டுவிடுகிறாள். வேலை பார்க்கும் விவசாய நிலத்தில் கத்திரிக்காய் செழித்து கிடப்பதை பார்த்த பூவனத்திற்கு தன் பிள்ளைகளுக்காக வீட்டிற்கு போகும்போது பறித்து செல்கிறாள். மாலை நேரத்தில் வேலை பார்த்த கூலியை வாங்க நில உரிமையாளரான அத்தை முறையான மாரியம்மாள் வீட்டிற்குச் செல்கிறார். கூலியை கொடுத்த கையோடு சிரித்துக்கொண்டே “அஞ்சு பைசா குறையாமல் சம்பளம் வேணுங்காக, அடிச்சு வாங்குற மாதிரி புடிங்கிட்டு போறாக, அதுக்கும் மேல புஞ்சையில காய்கனியை கை வைக்காக, என்ன நியாயம் இது?” சிரித்துக் கொண்டே செருப்பால் அடிக்க முடியுமா? பூவனத்துக்குள் ஆழத்தில் வெட்டுகிற வேதனை நறுக்கிடுகிற அவமான கூலி.

புஞ்சைக்காரி கூறும் போது சும்மாவா வெளையுது உரம் போடாம செலவழிக்காம விளையுமா? காய்கனியும் இப்ப துட்டு தான? துட்ட எடுத்தா களவாணித்தனமில்லையா? என விவசாயிகளின் ஆற்றாமையும் வெளிப்படுகிறது.

‘ஊர்ச்சோறு’ எனும் சிறுகதையில் குடிமகனாக (முடி திருத்துதல்) தலைமுறை தலைமுறையாக ஆவுடைச்சி-ராக்கப்பன் குடும்பம் தொழில் செய்து வருகிறது. இவர்களின் மகன் முனியசாமி இத்தொழிலை செய்ய மறுக்கிறான். இந்த ஊர்க்காரர் நமக்கு இருக்க இடம் கொடுத்து, அவர்கள் தோட்டத்தில் விளையிற தானியங்களை கொடுத்து, அவர்கள் சாப்பிடற உணவினை நாம் போனதும் தந்து நம்மை நல்லா பார்த்துக்காங்க. நீ இதை விட்டுட்டு வெளியில போய் என்ன செய்வ என்று மகன் மீது எரிச்சல்படுகிறார்.

ராக்கப்பனுக்கு சூடாக இட்லியும், தாளிப்புடன் கூடிய சட்னி சாப்பிட மனதில் ஆசை ஊறியது. தான் கடைக்கு அதிக கூட்டம் வந்ததால் கடைக்கு போய் சாப்பிட முடியவில்லை. ஊர் கூட்டம் கூட வீடு வீடாக தகவல் சொல்லச் சொல்லி நாட்டாண்மை அனுப்பிவிடுகிறார். ராக்கப்பன் சொல்லப்போகும் போது ஒரு வீட்டின் முற்றத்தில் உரலில் இட்லிக்கு மாவாட்டுவதை பார்க்கிறான். மனதில் மகிழ்கிறான். மறுநாள் முனியம்மாள் ஊர்ச்சோறு வாங்கி வந்தவுடன் அதில் இட்லியும் இருக்கும் என நினைத்து கடையில்

ஓசி சட்னி வாங்கி வந்து பார்க்கிறான், பழைய சோறு மட்டுமே போட்டு இருந்தார்கள்.

அவன் மனம் புழுங்கியது. மக்கள் முன்பு போல இல்லை என்பதை உணர்கிறான். ராக்கப்பனின் தாத்தா, ஐயா காலங்களில் மக்கள் அவர்கள் உண்ணும் உணவையே வழங்கினார்கள். இப்போது கிராமம் அவ்வாறில்லை என்பதை உணர்ந்து வெதும்புகிறான். தன் மனைவியிடம் ‘அவனுக்கு பிடித்த வேலையை செய்யச் சொல்’ என கூறிவிட்டு வெளியே செல்வதாக கதை அமைந்திருக்கும்.

எடைக்கல்லில் மாற்றம் வைத்து விவசாயிகளை ஏமாற்றி பருத்தியை வாங்கி லாபம் பார்க்க வேண்டியுள்ளது. கரிசல்குளம் ஊரில் அப்படி ஏமாற்றி பருத்தி வாங்கிவிட்டு மறுபடி அவ்வூர் செல்ல பயப்படுகிறான். அங்கு இதற்கு முன் ஏமாற்றிய வியாபாரியை கட்டி வைத்து வசவு (திட்டுதல்) உரித்தனர். அபராதமும் வாங்கப்பட்டது. பத்து நாட்களுக்குப் பிறகு அதே ஊருக்குப் போகிறான். அங்கு போனதும் உன்னிடம் பருத்தி போட்ட அந்த வீட்டு அம்மா உன்னை வரச் சொன்னாங்க என்று தகவல் வருகிறது. மாரிச்சாமிக்கு பயம் அப்பிக்கொண்டது. அந்த அம்மா ‘நீ அன்னைக்கு அரை கிலோ எடைக்கல்லை மறந்துட்டு போயிட்ட உன் பொருள் எனக்கு எதுக்கு’ என்று கொடுக்கிறாள். இவன் மனம் குற்றவுணர்ச்சி அடைகிறது. இவர்களையா ஏமாற்றினோம் என்று யாரிடமும் பருத்தி வாங்காமல் வீடு சேர்கிறான்.

## முடிவுரை

கரிசல் மண்ணின் மக்களின் ஈரம் காய்ந்த வறண்ட சூழ்நிலை பல படைப்புகளில் விவரித்துள்ளார். சமூகங்களின் வெளிப்பாடு மக்களின் வாழ்க்கையில் மாற்றங்களை கொண்டு வந்துள்ளன. பம்ப்செட் நீர்பாசனம், பால் சொசைட்டி, ரசாயன முறை வேளாண்மை என அனைத்தும் தொழில் முகமாக மாறியதால் விவசாய வீட்டு வாரிசுகளே விவசாயத்தின் அருமை அறியாமல் வளர்கின்ற சூழலை உணர்த்துகிறார். கிராம மக்களின் பயன்பாட்டில் சைக்கிளின் பங்களிப்பையும் அச்சைக்கிளின் வருணனையில் அம்மக்களின் வாழ்வியலையும் யதார்த்தப் போக்கில் வாழ்ந்து காட்டியவராகவே அறியப்படுகிறார். வரும் இளம் தலைமுறையினர் கரிசல் வாழ்க்கையினை வியப்புடன் அறிந்து கொள்ள மேலாண்மை பொன்னுச்சாமியின் படைப்புகளும் வழி வகுத்துள்ளன என்பதில் ஐயமில்லை.

## துணைநூற் பட்டியல் (References)

1. விரல் - சிறுகதை தொகுப்பு - மேலாண்மை பொன்னுச்சாமி
2. எழுத்து: ஓர் வழிகாட்டி - ஜெயமோகன்
3. சிறுகதை படைப்பின் உள் விகாரங்கள் - மேலாண்மை பொன்னுச்சாமி

© 2026 அனுசுயா சா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..